DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 51 / 2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 13 |
| Name | திரு. நடராஜன் |
| Father Name | பரதேசிதேவர் |
| Village | வெள்ளூர் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 64 |

**<u>(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 24-02-2025.(நேரம்: 12.47 PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது கே.டி.சி நகரில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் விவசாய வேலை செய்து வருகிறேன்.
3. அசா 1, 2 ஆகியோர்களை எனக்கு தெரியும்.
4.இறந்துபோன நல்லபாண்டி என்பவரை எனக்கு தெரியும்.
5.கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக பகல் 12,1 மணியளவில் புளியங்குளம் பஸ்ஸ்டாப்பில் அருகில் வைத்து நல்லபாண்டி வாகனம் மோதி இறந்து போய் விட்டதாக நான் கேள்விப்பட்டேன்.
6.வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது.
7. போலிசார் என்னை விசாரித்தார்கள் .

(அ.சா 13 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது . அ.சா 13ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.05.2016 ஆம் தேதி 17.17 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன நல்லபாண்டியும், காயம் அடைந்த சாட்சி ரமேஷ் என்ற ராமசாமியும் TN 72 BC 2224 என்ற பதிவெண் உள்ள Hero smart வண்டியில் புளியங்குளம் பஸ்ஸ்டாப் அருகே மேற்கிலிருந்து கிழக்காக சென்று கொண்டிருக்கும்போது எதிரே வந்த TN 72 BC 1274 என்ற பதிவெண் உள்ள TATA ACE வண்டியை இவ்வழக்கின் எதிரி இச்க்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி மோட்டார் சைக்கிளில் மோதியதில் நல்லபாண்டியும் , சாட்சி ரமேசும் தூக்கி வீசப்பட்டு நல்லபாண்டிக்கு முன்ந்தலையில் பலத்த ரத்தகாயமும் ஏற்பட்டு சம்பவ இடத்திலே இறந்தார் என்றும் சாட்சி ரமேசுக்கு கால் மற்றும் கனுங்கால் இடுப்பு பகுதியில் காயம் ஏற்பட்டது என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை விடுதலை செய்ய வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.51 / 2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW.14 |
| Name | திருமதி. பாத்தீமா பர்வின் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | காவல் உதவி ஆய்வாளர் , தச்சநல்லூர் காவல் நிலையம். |
| Religion | |
| Age | |

<u>( எதிரி ஆஜர் . எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 24-02-2025.(நேரம்: 02.56 PM )**

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தச்சநல்லூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன்.

2.இதற்கு முன்பாக செய்துங்கநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில்இருந்தபோது கடந்த 18.05.2016 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது வெள்ளூர் வடக்கு தெருவை சேர்ந்த நாகலிங்கதேவர் மகன் முருகேசன் வயது 42 மதிக்கத்தக்க என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 107/2016 சட்டபிரிவுகள் 279,337,304(ஏ) இதச வாக வழக்கு பதிவு செய்தேன் . அந்த அசல்புகார்

மனுவினையும், முதல் தகவல் அறிக்கையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் ஸ்ரீவைகுண்டம் அவர்களுக்கு அனுப்பியும் , இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 03.01 PM)**

1. திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மரு்த்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு தகவல் எதுவும் வந்ததா என்றால் இல்லை.

2.புகாரை பதிவு செய்யும் வரை காவல் நிலையத்திற்கு விபத்து தொடர்பாக தகவல் வரவில்லை என்றால் சரியல்ல .**விபத்து தொடர்பாக தகவல் உடனடியாக காவல் நிலையத்திற்கு வந்துவிட்டது . போலிசார் சம்பவ இடத்திற்கு உடனடியாக சென்று விட்டனர். இருப்பினும் அசா 1 புகார் கொடுக்கும் அளவிற்கு மனநிலையில் இல்லாததால் அவரிடம் உடனடியாக புகார் பெறப்படவில்லை என சாட்சி கூறுகிறார்.**

3. விபத்து தொடர்பாக தகவல் தெரிந்தவுடன் அது சம்மந்தமாக பொது நாள்குறிப்பேட்டில் தகவல் எதுவும் பதிவு செய்யப்பட்டதா என்றால ஞாபகம் இல்லை.

4.அசா 3 மத்திஸ்வரன் சம்பவ இடத்தில் வைத்து புகார் மனு கொடுத்தார் என்றும் அது இந்த வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் அவரது புகார்மனுவை மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல.

5. முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை என்றும் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.